# இலங்கையின் தேசிய ஊடகக் கொள்கை

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

1. கொள்கையின் பெயர்

2. அமுலுக்கு வரும் திகதி

3. அறிமுகம்

3.1 பின்னணி

3.2 தேசிய ஊடகக் கொள்கைக்கான தேவை

3.3 நோக்கம் மற்றும் சூழமைவு

3.4 நியாயப்படுத்தல்

4. கொள்கையின் குறிக்கோள்கள்

5. கொள்கையின் கோட்பாடுகள்

6. கொள்கைப் பிரகடனம்

7. பொருத்தப்பாடு மற்றும் பரப்பெல்லை

8. கொள்கையை அமுல்படுத்தல்

8.1 மூலோபாயங்கள்

8.2 பொறுப்பு மற்றும் அதிகாரம்

8.3 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

9. முடிவுரை

# இலங்கையின் தேசிய ஊடகக் கொள்கை

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

பதிப்பு 2024 ஜூலை 18

## நோக்கு

ஜனநாயகம், சமமான அபிவிருத்தி மற்றும் சமூக நீதியை வளர்ப்பதில் இலங்கையின் ஊடகங்களை பன்முகத்தன்மை கொண்டவையாகவும் நம்பகமானவையாகவும் பொறுப்புக்கூறத்தக்கவையாகவும் மாற்றியமைத்தல்.

## பணிக்கூற்று

ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஊடக உள்ளடக்க படைப்பாளர்களின் தொழில்முறைத் திறனை மேம்படுத்தி, பாதுகாப்பான மற்றும் பொறுப்புணர்வுள்ள கட்டமைப்பிற்குள் பொதுநலனுக்குச் சேவை செய்யக்கூடிய ஒரு சூழலை உருவாக்குவதே தேசிய ஊடகக் கொள்கையின் பணிக்கூற்றாகும்.

### 1. கொள்கையின் பெயர்

இந்தக் கொள்கை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தேசிய ஊடகக் கொள்கை என அழைக்கப்படும்.

### 2. அமுலுக்கு வரும் திகதி

அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்படும் திகதியிலிருந்து தேசிய ஊடகக் கொள்கை அமுலுக்கு வரும். அமுலுக்கு வரும் உத்தேச திகதி (பின்னர் சேர்க்கப்படும்)

இந்தக் கொள்கை 10 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொருத்தமான இற்றைப்படுத்தல்களுக்காக மூன்று (03) வருடங்களுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படும்.

### 3. அறிமுகம்

#### 3.1 பின்னணி

சுயாதீனமானதும், பன்முகத்தன்மைக் கொண்டதுமான சுதந்திர ஊடகம் ஜனநாயக சமூகங்களின் அடிப்படையாகும். மனித சுதந்திரம், ஜனநாயக ஆட்சிமுறை, சமமான அபிவிருத்தி மற்றும் சமூக நீதியை நிலைநாட்டுவதற்குப் பொறுப்புணர்வுள்ள மற்றும் வலுவான ஊடகத்துறை மிகவும் அவசியம்.

நல்லாட்சிக்கு சுயாதீனமான, சுதந்திரமான மற்றும் பன்முகத்தன்மைக் கொண்ட ஒரு ஊடகத்துறை அவசியம். ஏனெனில் அதன் மூலம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும்சட்டவாட்சியை உறுதிசெய்தல், பொது மற்றும் அரசியல் விவாதங்களில் பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும் வறுமைக்கு எதிரான போராட்டத்தில் பங்களிப்புச்செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு உதவ முடியும்.

ஊடகச் சுதந்திரம் என்பது பொதுநலன் சார்ந்த விடயங்களில் ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக அறிக்கையிடும் திறனைக் குறிக்கும். கருத்துது வெளியிடுவதற்கான உரிமை மற்றும் தகவல் அறியும் உரிமை ஆகியவை ஊடக சுதந்திரத்திற்கான அடிப்படையை வழங்குகின்றன.

இந்த இரண்டு உரிமைகளும் இலங்கையின் அரசியலமைப்பினால் பின்வருமாறு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளன. பிரிவு 14 (1) (அ) பேச்சு, வெளிப்பாட்டு மற்றும் வெளியீட்டுச் சுதந்திரத்தை

Ministry of Mass Media

உள்ளடக்கியுள்ளது. பிரிவு 14 அ தகவல்களை அணுகும் உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. இந்த இரண்டு அடிப்படை உரிமைகளும் இலங்கை ஏற்றுக்கொண்டுள்ள சர்வதேச மனித உரிமைகள் பெருந்தனைகள் மற்றும் சமவாயங்களிலும் பொதிந்துள்ளன.

அதே நேரத்தில், அரசியலமைப்பின் பிரிவு 15 (2) இன் மூலம் இன மற்றும் மத ரீதியான நல்லிணக்கத்தின் ஆர்வம் அல்லது பாராளுமன்ற சிறப்புரிமைகள், நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு அல்லது குற்றத்தைத் தூண்டுதல் தொடர்பாக கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமைக்குச் சில வரன்முறைகளை வரையறுத்துள்ளது. அது போதுமான சமூகப் பொறுப்புடன் கருத்துச் சுதந்திரத்தைப் பயன்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல்களை அணுகுதல் என்பன பிரஜைகளை வலுவூட்டும் பரந்த அபிவிருத்தி நோக்கங்களுக்கு பங்களிப்புச் செய்கின்றன. வலுவூட்டல் என்பது பிரஜைகள் தங்கள் சொந்த வாழ்க்கையின் மீது அதிக கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க உதவும் பல பரிமாண சமூக மற்றும் அரசியல் செயன்முறையாகும்.

### 3.2 தேசிய ஊடகக் கொள்கைக்கான தேவை

ஊடக சுதந்திரம் உள்ளிட்ட கருத்துச் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமையை சமநிலைப்படுத்துவதற்கான உயர் மட்டக் கட்டமைப்பாக தேசிய ஊடகக் கொள்கை செயற்படுகின்றது. இதில் ஊடக சுதந்திரத்துடன் ஊடகங்களின் பொறுப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் பொதுநலன் பாதுகாப்பு என்பவற்றின் தேவை என்பனவும் உள்ளடங்கும்.

சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஊடகக் கொள்கை மூலம் ஊடகப் பன்மைத்துவம் ஊக்குவிக்கப்படுவதோடு, அதன் மூலம் ஊடகப் பரப்பில் கருத்துக்கள் மற்றும் நிலைநோக்குகளின் பன்முகத்தன்மையும் உறுதி செய்யப்படும். அது ஊடகப் பெறுநர்களுக்கு பரந்த அளவிலான தகவல் மற்றும் கருத்துக்களை அணுகுவதற்கு அனுமதிப்பதால், ஊடகப் பன்மைத்துவமும் பன்முகத்தன்மையும் ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு அவசியமாகும்.

இலங்கையில் ஒரு தேசிய ஊடகக் கொள்கை இல்லாமல் இருப்பது ஊடகத் துறையின் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் கட்டுப்படுத்தியுள்ளதுடன் தொழில்நுட்பம், மக்கள்தொகையியல் மற்றும் சந்தை என்பவற்றில் நிகழும் மாற்றங்களுக்கு ஏற்ப ஊடகத் துறையின் திறனும் பின்தள்ளப்பட்டுள்ளது. அறநெறிசார்ந்த ஊடகவியல், தரமான பொழுதுபோக்கு உள்ளடக்கம் முதல் சமூகப் பொறுப்புள்ள விளம்பரப்படுத்தல் வரை ஊடகத்தின் அனைத்து அம்சங்களிலும் அதிக தொழில்வாண்மையை அடைந்துகொள்வதில் அது ஒரு வரையறுக்கும் காரணியாக மாறியுள்ளது.

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

### 3.3 நோக்கம் மற்றும் சூழமைவு

ஒரு தேசிய ஊடகக் கொள்கை இரண்டு வழிகளில் கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவிக்க முடியும்.

- முதலாவதாக, ஊடகக் கொள்கையானது, சுதந்திரமான மற்றும் பன்மைத்துவம் கொண்ட ஊடகங்கள் சிறப்பாகச் செயற்படுவதற்குத் தேவையான சட்டரீதியான பாதுகாப்பை வரையறை செய்ய முடியும். பொதுநலனுக்காக ஊடகவியலாளர்கள் தமது தொழிலைத் தொடரும் பொருட்டு அவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பது அரசாங்கத்தினதும் சமூகத்தின் ஏனைய பிரிவுகளினதும் கடமை என்பது வலியுறுத்தப்படுகின்றது.

- இரண்டாவதாக, ஊடகத் தொழில்வாண்மையாளர்கள் மற்றும் அவர்களது நிறுவனங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் அறநெறித் தரங்களை ஊடகக் கொள்கை தெளிவுபடுத்தும்.

தேசிய ஊடகக் கொள்கை ஒட்டுமொத்த சமூக அணுகுமுறையுடன் உருவாக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ஊடகம் இயல்பாகவே பல பங்குதாரர்களைக்கொண்ட முயற்சியாகும். இதில் அரசு, தனியார் துறை, தொழில்வாண்மையாளர்கள், கல்வியியலாளர்கள் மற்றும் சமூகங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஈடுபடுகின்றன. இதன் விளைவாக, தேசிய ஊடகக் கொள்கை வெறுமனே அரசிற்கான கொள்கையாக மாத்திரமன்றி ஏனைய அனைத்துப் பங்குதாரர்களுக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஊடக உரிமையாளர், ஊடக ஒழுங்குபடுத்துநர் மற்றும் ஊடக விளம்பரதாரர் என ஊடகத் துறையில் அரசு பல முக்கிய வகிபங்குகளை வகிக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளும் அதே நேரம், இந்தத் தேசிய ஊடகக் கொள்கை, தனியார் ஊடக உரிமையாளர்கள், ஊடக விளம்பரதாரர்கள், ஊடகக் கல்வியியலாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள், தொடரினை உள்ளடக்க உருவாக்குநர்கள் மற்றும் ஊடகப் பெறுநர்கள் உள்ளிட்ட ஏனைய பங்குதாரர்களின் ஊடகம் தொடர்பிலான உரிமைகள் மற்றும் பொறுப்புகளிலும் கவனம் செலுத்துகின்றது.

### 3.4 பொருத்தப்பாடு

ஊடகவியலாளர்கள் உட்பட அனைத்து பிரஜைகளும் தங்களது அடிப்படை உரிமைகளான கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் சுதந்திரத்தைப் பயன்படுத்தக்கூடிய விரிவான கட்டமைப்பை அரசியலமைப்பு வழங்கியுள்ள போதிலும், அரசியலமைப்பின் உத்தரவாதங்களுக்கும் சில சட்ட மற்றும் ஒழுங்குமுறை விதிகளுக்கும் இடையில் தற்போது ஒத்திசைவு இல்லாதது - முரண்பாடுகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நவீன கால ஊடக மற்றும் தகவல் தொடர்பாடல் சேவைகள் பல்வேறு சமூக – அரசியல் முன்னேற்றங்கள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள், மக்கள்தொகையியல் மாற்றங்கள் மற்றும் சந்தைச் சக்திகளால் கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளாக மாற்றமடைந்து வந்துள்ளதே அதற்கான காரணமாகும். இந்தக் காலகட்டத்தில், அரசாங்கங்கள் இத்தகைய திட்டமிடப்படாத வளர்ச்சி அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப பல்வேறுபட்ட சட்டங்கள், விதிமுறைகள் அல்லது வழிகாட்டுதல்களுடன் தற்காலிக அடிப்படையில் பதிலளித்துள்ளதுடன் அவை ஒரு விரிவான கொள்கைக் கட்டமைப்பைக் கொண்டிருக்கவில்லை.

காலனித்துவ காலம் அல்லது சுதந்திரத்திற்குப் பிந்திய ஆரம்ப ஆண்டுகளில் இருந்த சில சட்டங்கள் இருபத்தியோராம் நூற்றாண்டின் ஊடக உள்ளடக்கத்தின் உருவாக்கம், ஊடக நுகர்வு மற்றும் ஊடக ஒழுங்குமுறை ஆகியவற்றின் யதார்த்தங்களை பூர்த்திசெய்யப் போதுமானதாகவோ அல்லது பொருத்தமானவையாகவோ இல்லை. இத்தகைய சட்டங்கள் ஊடகத் துறையில் புத்ததாக்கம் மற்றும் மீள்தன்மையை இல்லாமலாக்கும்.

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

எனவே, இலங்கையில் பன்மைத்தவம் கொண்ட, வலுவான மற்றும் பொறுப்புணர்வுள்ள ஊடகத் துறைக்கான கொள்கைக் கட்டமைப்பை உருவாக்குவதே தேசிய ஊடகக் கொள்கையின் அடிப்படை நோக்கமாகும். கொள்கை கட்டமைப்பு நடைமுறைக்கு வந்தவுடன், இதில் உள்ள கொள்கைகள் மற்றும் அறிக்கைகளுடன் இணங்கும் வகையில் ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்து திருத்தங்களை மேற்கொள்வதற்கு அது உதவும்.

4. கொள்கையின் குறிக்கோள்கள்

கொள்கையின் குறிக்கோள்கள் என்பது கொள்கை வகுப்பாளர்கள் அடைய விரும்பும் பரந்த விளைவுகளாகும். தேசிய ஊடகக் கொள்கை பின்வரும் கொள்கை நோக்கங்களை எட்டுக் கொத்தணிகளாகத் தொகுத்துள்ளது.

குறிக்கோள் 1:

வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கான உரிமையையும், தகவல்களை அணுகும் உரிமையையும் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல், இவை இரண்டுக்கும் இலங்கையின் அரசியலமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இலங்கை ஏற்றுக்கொண்ட சர்வதேச மனித உரிமைகள் பொருந்தனைகளிலும் அவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

குறிக்கோள் 2:

எந்தவொரு தரப்பு அல்லது பிரிவின் நலன்களுக்கும் மேலாக பொதுநலனுகாகக் குரல்கொடுக்கும் சுயாதீன ஊடகத்துறையைக் கட்டியெழுப்புதல். அத்துடன், ஊடகவியலாளர்களின் அறநெறி, பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை ஆதரிப்பதன் மூலம் அவர்களின் ஆசிரியபீடச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்.

குறிக்கோள் 3:

ஊடகப் பன்மைத்துவம் மற்றும் ஊடகப் பன்முகத்தன்மையை ஊக்குவித்தல், இவை இரண்டும் திரளான ஊடக நிறுவனங்கள், கருத்துக்கள், உள்ளடக்கம் மற்றும் மிகவும் மாறுபட்ட செய்தி அறைகள் என்பவற்றை அங்கீகரிக்கும் ஒரு சுயாதீனமான மற்றும் வலுவான ஊடக சூழலை உருவாக்குவதற்கு இன்றியமையாதவை.

குறிக்கோள் 4 :

ஊடகவியலாளர்கள், ஏனைய ஊடக ஊழியர்கள் மற்றும் தொடரினை உள்ளடக்கப் படைப்பாளர்கள் ஆகியோருக்கு உடல் ரீதியான, பாலியல் ரீதியான, உளவியல்-சமூக, சட்ட அல்லது இணைய வழியிலான துன்புறுத்தல்கள் இன்றி தொழில்வாண்மை நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு பாதுகாப்பான பணிச்சூழலை உருவாக்குதல்.

குறிக்கோள் 5:

ஊடக நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஊடகப் பணியாளர்கள், களநிலையிலிருந்து செய்திகளை வெளியிடுபவர்கள் (மாகாண ஊடகவியலாளர்கள்') மற்றும் வழக்கமான சுயாதீன ஊடகவியலாளர்கள் ஆகியோரின் தொழில் உரிமைகளை உறுதி செய்வதற்கான சிறந்த பணிச்சூழலை ஊக்குவித்தல்.

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

குறிக்கோள் 5:

ஊடக நிறுவனங்களுக்குள் சிறந்த பால்நிலைச் சமத்துவம் மற்றும் பால்நிலை உணர்திறனை ஊக்குவித்தல், இதன் மூலம் அனைத்து ஊடக தொழில்வாண்மையாளர்களுக்கும் மிகவும் சிறந்த பணிச்சூழலை உருவாக்குதல்.

குறிக்கோள் 6:

இலங்கையில் ஊடக ஆளுகையில் பலதரப்பட்ட பங்குதாரர்களின் அணுகுமுறைகளைப் பேணிவளர்த்தல், அரசு, ஊடகத் துறை, ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், ஊடகக் கல்வியியலாளர்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியோர் இந்தத் துறைக்கான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளில் இணைந்து பணியாற்றுதல்.

குறிக்கோள் 7:

கருத்துச் சுதந்திரம் மற்றும் வெகுசன ஊடகங்கள் தொடர்பான தற்போதைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்வதற்கும் சீர்திருத்துவதற்கும் கொள்கை வழிகாட்டுதலை வழங்குதல். மேலும், இந்தப் பகுதிகள் தொடர்பான எதிர்கால சட்டவாக்க மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்கு ஒரு ஒத்திசைவான கட்டமைப்பை உருவாக்குதல்.

குறிக்கோள் 8 :

ஒலிபரப்பு உரிமம் மற்றும் அலைவரிசை ஒதுக்கீட்டின் செயன்முறைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் தரப்படுத்துவதன் மூலம் பொதுச்சொத்தாக இருக்கும் மின்காந்த அலைக்கற்றைகளைச் சிறந்த முறையில் நிர்வகித்தல்.

குறிக்கோள் 9 :

எந்தவொரு துணைத் துறையிலோ அல்லது புவியியல் ரீதியிலோ நடைமுறையில் ஊடக ஏகபோக உரிமைகள் தோன்றுவதையோ அல்லது ஒருங்கிணைப்படுவதையோ தடுப்பதற்கு ஊடக உரிமையாண்மையில் அதிக வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல். மேலும், வெளிநாட்டு தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் இலங்கையில் ஊடக நிறுவனங்களை எவ்வாறு இணைப்புரிமையைப் பெற முடியும் என்பதையும் ஒழுங்குபடுத்தல்.

குறிக்கோள் 10:

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் புலமைச் சொத்து உரிமைகளைப் பாதுகாத்தல், மேலும் ஊடகப் பணியாற்றவோர் மற்றவர்களின் புலமைச் சொத்து உரிமையை மதிக்கும் ஊடகப் பண்பாட்டைத் தோற்றுவித்தல்.

குறிக்கோள் 11:

அரசு மற்றும் தனியார் ஊடகங்கள் மற்றும் தொடரினை உள்ளடக்கத்தை உருவாக்குபவர்களின் நலனுக்காகப் பொதுநல ஊடக உள்ளடக்கத்திற்கு நிதியளிப்பதற்கான புதிய மற்றும் புத்தாக்க வழிமுறைகளை ஆராய்தல்.

குறிக்கோள் 12:

நம்பகரமான ஊடகத்துறை மற்றும் தரமான பொழுதுபோக்கினைப் பெறுவதற்கான ஊடகப் பெறுநர்களின் உரிமைகளை ஊக்குவித்தல். அத்துடன், ஊடக உள்ளடக்கம் மற்றும் நடத்தை குறித்த பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு முறையான குறை தீர்க்கும் வழிமுறைளை ஸ்தாபித்தல்.

குறிக்கோள் 13:

ஊடக உள்ளடக்கத்தை விமர்சனரீதியாக நுகரும் ஊடகப் பெறுநர்களின் திறனை வலுப்படுத்துவதற்கு டிஜிட்டல் கல்வி உட்பட ஊடக மற்றும் தகவல் விளங்கறிவை ஊக்குவித்தல்.

குறிக்கோள் 14:

பல்கலைக்கழக அடிப்படையிலான ஊடக மற்றும் ஊடகவியல் கல்வி மற்றும் ஊடகத் துறையின் நடைமுறைத் தேவைகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கு பல்கலைக்கழக – தொழிற்கள இணைப்புத் திட்டங்களை உருவாக்குதல். அதே நேரத்தில், ஊடகவியலாளர்கள் தங்களது தொழில்வாண்மையை மேம்படுத்துவதற்கான திறன்களை வலுப்படுத்தல்.

குறிக்கோள் 15:

ஒரு தொழில்வாண்மை அமைப்பின் மூலம் இலங்கையில் ஊடகத் துறையை ஒரு தொழிலாக அங்கீகரித்தல். மேலும், ஒரு தேசிய தரப்படுத்தல் முறையை உருவாக்குவதன் மூலம் ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய ஊடக ஊழியர்களின் பணி அனுபவத்திற்கு அங்கீகாரம் வழங்குதல்.

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

## 5. கொள்கையின் கோட்பாடுகள்

கீழே தரப்பட்டுள்ள கொள்கைக் கோட்பாடுகள் பொறுப்புக்கூறல், கண்ணியம், உரையாடல், சமத்துவம், சுதந்திரம், உள்ளடக்கிய தன்மை, வெளிப்படைத்தன்மை, பாதுகாப்பு, சுயநிர்ணய உரிமை, வெகுமதி மற்றும் பொறுப்பு போன்ற அடிப்படை மற்றும் உலகளாவிய பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டவை. அவை பொதுவான ஜனநாயக பெறுமானங்களின் ஒரு பகுதியாக கருதப்படுகின்றன. ஊடக உள்ளடக்க உருவாக்கம், பரப்புதல் மற்றும் பாவனை ஆகியவற்றில் நவீன யதார்த்தங்களாக அவை கருதப்படுகின்றன.

| கொள்கை கோட்பாடு | கொள்கைப் பிரகடனங்களுடன் இணங்குகின்றன. |
|---|---|
| **கொள்கை 1:**<br>கருத்துச் சுதந்திரம் அனைத்துப் பிரஜைகளுக்கும் உள்ள உரிமையாகும். மேலும் பேச்சு சுதந்திரம், ஊடக சுதந்திரம், பதிலளிக்கும் உரிமை, தொடர்பு சாதனங்களுக்கான சமமான அணுகல், அறிவதற்கான உரிமை ( தகவல் சுதந்திரம் என்றும் அழைக்கப்படுகின்றது) மற்றும் மாற்றுக் கருத்துகளை அணுகுதல் என்பனவும் இதில் உள்ளடங்கும். | A and B |
| **கொள்கை 2 8;**<br>பிரஜைகள் சுதந்திரமான மற்றும் திறந்த சமூகத்தில் பங்கேற்கத் தேவையான நம்பகரமான தகவல்களை வழங்குவதன் மூலம் ஆரோக்கியமான குடியியல் வெளியை மேம்படுத்துவதில் ஊடகத்துறை முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் சுயாதீனமான கண்காணிப்பாளராகவும் அது செயற்படுகின்றது. | C |
| **கொள்கை 3:**<br>ஊடகங்களின் ஆசிரியப்பீடச் சுதந்திரம் என்பது ஊடகவியலாளர்கள் மற்றும் செய்தி அறைகளில் பணியாற்றுபவர்கள் அரசியல் மற்றும் வணிக அழுத்தங்கள் இன்றித் தமது பணியைச் செய்யக்கூடிய ஒரு அத்தியாவசிய நிபந்தனையாகும். மேலும், ஊடகத்துறை பொதுநலன் மற்றும் ஊடக அறிநெறிகளால் ஆளப்படுகின்றது. | D |
| **கொள்கை 4:**<br>ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு ஊடகப் பன்மைத்துவம் அவசியம், ஏனெனில் இது எந்த ஒரு நிறுவனமோ அல்லது கண்ணோட்டமோ ஊடகக் கதையாடலில் ஆதிக்கம் செலுத்துவதில்லை என்பதை உறுதி செய்கின்றது. அது மிகவும் தகவலறிந்த மற்றும் சமநிலையான பொதுநிலைக் கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் அளிக்கின்றது. | E |
| **கொள்கை 5:**<br>பொதுநலனுக்காக தமது பணிகளை மேற்கொள்ளும் ஊடகவியலாளர்களுக்கு துன்புறுத்தல், சிறைத்தண்டனை, வன்முறை அல்லது மரண அச்சுறுத்தல் விடுக்கப்படும்போது, அவர்கள் உடல்ரீதியாகவும், சட்டரீதியாகவும், நிறுவனரீதியாகவும் பாதுகாக்கப்படல் வேண்டும். | F |

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

| | |
|---|---|
| கொள்கை 5 :<br>ஊடகத் துறையில் உள்ள அனைவருக்கும் சிறந்த ஊதியம் மற்றும் நியாயமான பணி நிலைமைகள் மற்றும் எந்தவொரு உடல், பாலியல், உளவியல் - சமூக அல்லது வாய்மொழித் துன்புறுத்தல் அல்லது எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்கொள்ளாமல் வேலை செய்வதற்கு உரிமை உண்டு. | G |
| கொள்கை 6:<br>ஊடகத்தின் சொந்தப் பொறுப்புக்கூறல் மற்றும் சமூகப் பொறுப்பு, ஊடக அறநெறிகளைப் பின்பற்றுவதைக் கோருகின்றது. இதில் ஊடக உள்ளடக்கம் குறித்த பொதுநிலை முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான நிறுவன வழிமுறைகளும் அடங்கும். | H |
| கொள்கை 7 :<br>ஊடகங்களின் சுதந்திரம், அரச, தனியார் துறை, சிவில் சமூகம், ஊடகத் தொழில் மற்றும் கல்வித்துறை உள்ளிட்ட பல பங்குதாரர்களை உள்ளடக்கிய நிர்வாக மாதிரியின் மூலம் செயற்படுத்தப்படும் சட்டத்தால் ஆளப்படும் ஒரு கூட்டு - ஒழுங்குபடுத்தல் பொறிமுறையின் மூலம் சிறப்பாக உறுதி செய்யப்படுகின்றது. | I |
| கொள்கை 8:<br>ஊடகத் துறையின் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு இசைவானதாக இருத்தல் வேண்டும் மற்றும் ஊடகங்களின் சுதந்திரத்திற்கும் பொறுப்புக்கூறலுக்கும் இடையில் ஆரோக்கியமான சமநிலையைப் பேணுதல் வேண்டும். | J |
| கொள்கை 9 :<br>ஊடக உரிமையாண்மையில் முழுமையான வெளிப்படைத்தன்மையைக் கோரும் கொள்கைகள் மூலமாகவும், நியாயமான சந்தைப் போட்டியை உறுதி செய்வதன் மூலமாகவும் ஊடக பன்முகத்தன்மை வகைப்பாடுகள் மற்றும் பன்மைத்துவம் தொடர்பான விடயங்கள் அடிப்படையில் கவனத்திற்கொள்ளப்படுகின்றன. | K |
| கொள்கை 10:<br>ஊடகத் தொழில்முனைவோருக்கு அரசு பொருத்தமான நிதிக் கொள்கைகள், ஊடகப் புத்தாக்கங்களைத் தடுக்கும் தடைகளை நீக்குதல் மற்றும் அனைவருக்கும் சமமான நிலையை உறுதி செய்தல் ஆகியவற்றின் மூலம் சிறந்த ஒத்துழைப்பை வழங்குதல். | L |
| கொள்கை 11:<br>பொதுநலனுக்கான ஊடகத்துறை நிலைத்திருப்பதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை. ஊடகத் துறைக்கு வெளியில் இருந்து மேலதிக நிதியைப் பெற்று, அதை நியாயமான மற்றும் சமமான வழிகளில் வழங்குவதன் மூலம் இதனைச் சாதிக்க முடியும். | M |
| கொள்கை 12:<br>ஊடகங்களின் எதிர்கால இருப்புக்கு ஊடகங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்த வேண்டியது இன்றியமையாதது. மேலும், இதற்கு அறநெறி சார்ந்த ஊடகம், பொறுப்புணர்வுள்ள ஊடக நிறுவனங்கள் மற்றும் அதிக தொழில்வாண்மை என்பன தேவை. | O |
| கொள்கை 13:<br>மின்காந்த அலைக்கற்றை என்பது பொதுச் சொத்து மற்றும் வரையறுக்கப்பட்ட வளமாகும். இதன் பயன்பாடு தொலைத்தொடர்பு, ஒலிபரப்பு, அவசரகாலத் தகவல் தொடர்பு மற்றும் ஏனைய நோக்கங்களுக்காக உகந்ததாகவும் வெளிப்படையாகவும் நிர்வகிக்கப்படல் வேண்டும். | P |

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

| | |
|---|---|
| கொள்கை 14:<br>ஊடகத் துறைக்கு அதன் புலமைச் சொத்து உரிமையைச் சிறப்பாகப் பாதுகாக்க வேண்டும். மேலும் ஊடகப் பணியாற்றுவோர் ஏனையவர்களின் புலமைச் சொத்து உரிமையை சிறப்பாக மதித்தல் வேண்டும். | Q |
| கொள்கை 15:<br>நியாயமான, தகவலறிந்த மற்றும் பொறுப்பான ஊடகச் சூழலை உருவாக்குவதற்கு ஊடகப் பெறுநர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. | R |
| கொள்கை 16:<br>டிஜிட்டல் அறிவு உட்பட ஊடகம் மற்றும் தகவல் விளங்கறிவு என்பன அனைத்து பிரஜைகளுக்கும் அவசியமான வாழ்க்கைத் திறன்களாகும். அது ஊடக உள்ளடக்கத்தை விமர்சனரீதியாக நோக்குவதற்கும், பயநர் உருவாக்கும் உள்ளடக்கத்தை பொறுப்புடன் நிர்வகிக்கவும் உதவும். | S |
| கொள்கை 16:<br>ஊடகக் கல்வி மற்றும் பயிற்சி சிறந்த ஊடகத் தொழில்வாண்மைக்குப் பங்களிப்புச் செய்கின்றன. மேலும், அது நவீன ஊடக யதார்த்தங்களுக்கு முகம்கொடுக்கக் கூடிய வகையில் மறுசீரமைக்கப்படல் வேண்டும். | T |
| கொள்கை 17:<br>தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தைக் கண்காணிப்பதற்கும் இழிவளவாக்குவதற்கும், நிதிவளமாக்கப்பட்ட உள்ளடக்கத்திலிருந்து வருமானத்தை மிகவும் சமமாகப் பகிர்ந்து கொள்வதற்கும், முக்கிய இணைய வாய்ப்புக்களை வழங்கும் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களை ஈடுபடுத்துவது அவசியமாகும். | U |
| கொள்கை 18:<br>ஊடகத் துறையில் செயற்கை நுண்ணறிவு (AI) முன்னேற்றங்கள் புதிய அறநெறிசார் சவால்களை உருவாக்குகின்றன. அவை கவனமாகப் பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | V |

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

6. கொள்கைப் பிரகடனங்கள்

A. **கருத்துச் சுதந்திரத்தை ஊக்குவித்தல்**: கருத்துச் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமையானது எந்தவொரு ஊடகத்திலும், எந்த வடிவத்திலும் மற்றும் அனைத்து எல்லைகளிலும் தகவல் மற்றும் முன்மொழிவுகளைத் தேடுவதற்கான, பெறுவதற்கான மற்றும் வழங்குவதற்கான உரிமையை உள்ளடக்குகின்றது. இது ஒவ்வொரு தனிநபரின் உரிமை என்பதுடன், ஊடகச் சுதந்திரமானது இந்த உரிமையை ஊடக நோக்கங்களுக்காகத் தகவல்களைத் தேடுபவர்கள், பெறுபவர்கள் மற்றும் வழங்குபவர்கள் சார்பிலும் பாதுகாக்கின்றது. அச்சு ஊடகங்கள், ஒலிபரப்பு ஊடகங்கள் மற்றும் தொடரிணை வெளிப்படுத்தலின் ஒழுங்குபடுத்தலை பிரஜைகள் தகவல் மற்றும் முன்மொழிவுகளைப் பெறுவதையும் வழங்குவதையும் கலந்துரையாடலில் பங்கேற்பதையும் தேவையற்ற முறையில் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக மேம்படுத்தல் வேண்டும்.

B. **சாத்தியமான அதிகபட்ச வெளிப்படுத்தலை செயற்படுத்துதல்**: கருத்துச் சுதந்திரம் என்பது, சாதகமாகப் பெறப்பட்ட அல்லது கருதப்படுகின்ற தகவல் அல்லது கருத்துக்களுக்கு மட்டுமல்லாது, வேதனைக்குள்ளாக்கப்படுகின்ற, அதிர்ச்சியூட்டுகின்ற அல்லது இடையூறு விளைவிக்கின்றவற்றுக்கும் பொருந்தும். குறிப்பிடத்தக்க வகையில், இது கருத்து வேறுபாடு உரிமையை உள்ளடக்கியது. ஜனநாயக சமூகங்கள், ஊடகங்கள் மற்றும் ஏனைய மன்றங்கள் மூலமாக அதிகபட்ச சுதந்திரமான வெளிப்பாட்டிற்கான பாதுகாப்பு மற்றும் சாதகமான நிலைமைகளை உருவாக்க வேண்டும். கருத்துச் சுதந்திரத்தின் மீதான மட்டுப்பாடுகள் குறுகியதாகவும், குறிப்பானதாகவும், நியாயமானதாகவும், சுதந்திரமான நீதித்துறை அமைப்பைத் திருப்திப்படுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

C. **ஊடகத்துறையை ஓர் பொதுச் சொத்தாக அங்கீகரித்தல்**: கொவிட்-19 பெருந்தொற்று, நம்பகரமான மற்றும் பொறுப்பான ஊடகம் ஒரு உயிர் காக்கும் முயற்சியாக இருக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. சுதந்திரமான, பன்மைத்துவமான மற்றும் சுயாதீனமான ஊடகம் என்பது நம்பகரமான செய்தி மற்றும் தகவலறிந்த பகுப்பாய்வை வழங்குவதனூடாக "தகவல் என்பது ஒரு பொதுச் சொத்து" என்பதற்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு முக்கியமான இயந்திரமாகும். இது ஊடகத்துறையை பொதுச் சொத்தாக அங்கீகரிப்பதற்கு வழிவகுக்கின்றது. தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் சந்தை சக்திகள் சுதந்திரமான ஊடகத்தின் பொருளாதார சாதகத்தன்மையை அச்சுறுத்தும் போது, ஊடகம் தொடர்ந்து பொதுச் சொத்தாக செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு கொள்கை அளவிலான நடவடிக்கைகள் அவசியப்படுகின்றன. இதில் செய்தி ஊடகச் செயற்பாடுகள் மற்றும் உள்ளடக்கத்திற்கான குறிப்பாக புலனாய்வு ஊடகவியலுக்காக பொது மற்றும் நன்கொடை நிதியளிப்பை திரட்டுவதும் உள்ளடங்கும் (நிதியளிப்பின் ஆதாரங்கள் அதனைப்பெறும் ஊடக நிறுவனங்களால் முழுமையாக வெளிப்படுத்தப்படும் வரை).

D. **ஆசிரியர்பீடச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்**: ஆசிரியர்பீட ரீதியாக சுதந்திரமான ஊடகமானது செய்திகள் தங்களுடைய தற்போதைய அபிப்பிராயங்களை வலுப்படுத்த வேண்டும் என்ற விருப்பம் மட்டுமல்லாது பிரஜைகளின் செய்திகளையும் தகவலையும் திறந்த மனதுடன் அணுகுவதற்கும் இடமளிக்கின்றது. ஆசிரியர்பீடச் சுதந்திரம் என்பது, ஊடக உரிமையாளர்கள், வணிக முகாமையாளர்கள், விளம்பரதாரர்கள், அரசாங்க அதிகாரிகள் அல்லது பரிந்துபேசும் குழுக்களின் குறுக்கீடு இன்றி, தொழில்முறை நியதிகள் மற்றும் பொதுமக்களின் தகவல் அறியும் உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் ஊடகவியலாளர் அல்லது ஒலிபரப்பாளர்களால் உள்ளடக்கத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதாகும். ஊடகவியலாளர்கள் தங்களின் ஆதாரங்களைப் பாதுகாப்பதற்கான உரிமையானது ஆசிரியர்பீட சுதந்திரத்தின் ஒருங்கிணைந்த பகுதி என்பதுடன், அது மதிக்கப்படவேண்டியதுடன் பாதுகாக்கப்படவும் வேண்டும்.

E. **ஊடகப் பன்மைத்துவத்தை ஊக்குவித்தல்**: பல்வகைத்தன்மையான ஊடக வழங்குநர்களால் (வெளிப்புற ஊடகப் பன்மைத்துவம்) அல்லது ஒரு ஊடகத்திற்குள் பல்வகைப்பட்ட அபிப்பிராயம் உருவாக்கும் ஊடக உள்ளடக்கத்தினால் (உள்ளக ஊடகப் பன்மைத்துவம்) அல்லது இரண்டாலும் சுதந்திரமான மற்றும் ஜனநாயக பொது அபிப்பிராயத்தை உருவாக்கும் செயன்முறை

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

செயற்படுத்தப்படும்போது ஊடகப் பன்மைத்துவம் நிலவுகின்றது. ஊடகத் துறையும் ஊடக தொழிற்துறையும் ஊடகப் பன்மைத்துவ எண்ணக்கருவை வலியுறுத்தி, ஆசிரியர்பீடம், பணியாளர் மற்றும் முகாமைத்துவ மட்டங்களில் அதற்கான அர்ப்பணிப்பு வேண்டும். ஊடகப் பன்மைத்துவத்தின் இன்றியமையாத பகுதியானது சமூகத்தில் ஒதுக்கப்பட்ட குழுக்களின் நலன்கள் மற்றும் கருத்துக்கள் ஊடக உள்ளடக்கத்தில் இடம்பெறுவதை உறுதி செய்வதாகும்.

F. **ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்:** ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களின் ஊடக நிறுவனங்கள் பொதுநலன் கருதி அவர்கள் செய்யும் பணிக்காக அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களுக்கு உள்ளாகும்போது, சமூகம் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்குக் கடமைப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்கள் உடலியல், பாலியல், உள சமூக, சட்ட அல்லது தொடரிணை துன்புறுத்தலில் இருந்து விடுபடுவதற்கு பாதுகாப்பான சூழலை உருவாக்க அரசாங்கம், ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர் சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டியுள்ளது. ஊடகவியலாளர்கள் மற்றும் பிற ஊடக பணியாளர்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளிலும் ஈடுபடுபவர்கள் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுவதை முடிவுறுத்துவதற்கு சட்ட அமுலாக்கம் மற்றும் நீதித்துறைச் செயன்முறைகள் வலுப்படுத்தப்படல் வேண்டும்.

G. **சாதகமான பணிச்சூழலை உருவாக்குதல்:** முறைசார் அல்லது முறைசாரா மற்றும் அலுவலக செயற்பாட்டு மட்டத்திலோ அல்லது களமட்டத்திலோ ஈடுபடுகின்ற ஊடகவியலாளர்கள் மற்றும் பிற ஊடகப் பணியாளர்களுக்குச் சிறந்த பணி நிலைமைகள் அவசியமாகும். இவற்றில் தொழில் பாதுகாப்பு; பொருத்தமான ஊதியம்; நியதிச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஏனைய நன்மைகளுக்கான அணுகல்; காப்புறுதி; மற்றும் நாட்டில் தொழில் ஒழுங்குவிதிகளால் வழங்கப்பட்டுள்ள தொழிலாளர்களின் உரிமைகள் என்பன உள்ளடங்கும். அதே நேரத்தில், ஊடகத்துறையில் பணிபுரியும் அனைவருக்கும் உடலியல், பாலியல், உள-சமூக அல்லது வாய்மொழி மூலமான துன்புறுத்தல் மற்றும் எந்தவகையான பாகுபாடும் அற்ற சூழலில் பணியாற்றுவதற்கு உரிமை உள்ளது. பணியிடத்தில் பிரச்சினைகளைச் சந்திக்கும் ஊடகவியலாளர்களுக்கு பொருத்தமான மனக்குறைகளை சமர்ப்பிக்கும் பொறிமுறையும் காணப்படல் வேண்டும்.

H. **ஊடகத்தின் பொறுப்புணர்வு மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்:** ஊடகங்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பொறுப்புக்கூறும் வகையில் நோக்கும் அதே வேளையில், அவற்றினது சொந்தப் பொறுப்புணர்வையும் பொறுப்புக்கூறலையும் உறுதி செய்ய வேண்டிய கடப்பாடும் காணப்படுகின்றது. இதில் ஊடகங்கள் உயர் தொழில்வாண்மைத் தரநிலையை அடைய விரும்புதல், ஊடக அறநெறிகளை கடைப்பிடித்தல் மற்றும் பொதுநலனை நிலைநிறுத்துவதற்காகத் தனிப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு ஆசிரியர்பீடச் சுதந்திரம் இருப்பதை உறுதி செய்தல் என்பன உள்ளடங்கும். பிரகடனப்படுத்தப்பட்ட ஊடக அறநெறிகளை (அல்லது நடத்தைக் கோவையை) தொடர்ந்து கடைப்பிடிப்பதன் மூலமாக ஊடகத்தின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்வுக் கடப்பாடுகளை கணிசமான அளவிற்கு பூர்த்தி செய்ய முடியும். (பின்னிணைப்பு நிரலில் இலங்கையின் ஊடக அறநெறிக் கோவை பட்டியலிடப்பட்டுள்ளது). அதே நேரத்தில், அச்சு, ஒலிபரப்பு மற்றும் தொடரிணை ஊடகங்களில் உள்ள குறிப்பான உள்ளடக்கம் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் தீர்ப்பதற்குமான முழுமையான பொறுப்புக்கூறலுக்கு ஓர் நிறுவன ரீதியான பொறிமுறை அவசியமாகும்.

H. **ஊடகத்துறை ஆளுகையை நெறிப்படுத்தல்:** ஊடகத்துறை ஊடகவியலாளர்களின் உரிமைகள் மற்றும் ஊடகங்களின் சுதந்திரத்தை அங்கீகரித்து ஊக்கமளிக்கும் அதேவேளையில் முழுமையாகப் பொறுப்புக்கூறும் ஆளுகை ஏற்பாடு அவசியமாகும். அரச ஒழுங்குவிதிகளின் பின்னடைவுகள் மற்றும் சுய-ஒழுங்குபடுத்தலில் உள்ள பலவீனங்களைக் கருத்திற்கொண்டு, இணை ஒழுங்குபடுத்தல் முறைமை எனப்படும் மூன்றாவது தெரிவு விரும்பப்படுகிறது. இணை ஒழுங்குபடுத்தல் என்பது அரச ஒழுங்குபடுத்தல் மற்றும் சுய-ஒழுங்குபடுத்தலின் கலப்பு முறை என்பதுடன், இது சட்டத்தால்

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

செயற்படுத்தப்படுவதுடன் பல் பங்குதாரர் அணுகுமுறையை உள்ளடக்கிய அதிகளவிலான உட்படுத்தல் ஆளுகை மாதிரியின் மூலமாக அமுலாக்கம் செய்யப்படும்.

J. **தேர்தல் நேர்மைத்தன்மையை ஊக்குவித்தல்**: ஊடகங்கள் தேர்தல்கள் தொடர்பில் பிரதான பங்கை வகிக்க முடியும்: இவற்றில், தேர்தல் செயன்முறை மற்றும் வேட்பாளர்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல்; வேட்பாளர்களின் உரைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அறிக்கையிடல்; அரசியல் கட்சி நிலைப்பாடுகளை விமர்சித்தல்; பிரச்சினைகள் மற்றும் தெரிவுகள் பற்றிய பொதுக் கலந்துரையாடலில் வாக்காளர்கள் ஈடுபடக்கூடிய தளங்களை உருவாக்குதல்; மற்றும் தேர்தல் அலுவலர்களைச் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடாத்துவதற்கு, பொறுப்புக்கூறுவதற்கு ஊக்கப்படுத்தல் என்பன உள்ளடங்கும். இந்த வகிபாகங்களைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு, மரபார்ந்த ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் உள்ளிட்ட தொடரிணை ஊடகங்கள் ஆகிய இரண்டும் நாட்டின் தேர்தல் சட்டங்களுக்குக் கட்டுப்பட வேண்டியதுடன், தேர்தல் அலுவலர்களால் வழங்கப்பட்ட ஊடகங்கள் மற்றும் தகவல் தொடர்பாடல் நடவடிக்கைகள் குறித்த வழிகாட்டுதல்களையும் பின்பற்றுதல் வேண்டும். இத்தகைய வழிகாட்டுதல்கள் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து அனைத்து முடிவுகளும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்வரை அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள், தனியாருக்குச் சொந்தமான ஊடக நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய சமூக ஊடகத் தளங்களின் நடத்தைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தல் வேண்டும். தேர்தல் சட்டங்கள் மற்றும் ஊடக வழிகாட்டுதல்கள் தொடர்பில் அவர்களது பங்கு யாதெனில், பல்வேறுபட்ட நியாயாதிக்கங்களில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த ஊடகங்களின் யதார்த்தங்கள் மற்றும் பல்வேறு தகவல் மற்றும் கருத்து வழங்குநர்களிடையே சட்ட அமுலாக்கத்தில் உள்ள சவால்களை வெளிப்படுத்தல் வேண்டும் என்பதாகும்.

K. **ஊடகம் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்தல்:** சுமார் 150 ஆண்டுகளாக வகுக்கப்பட்ட ஏராளமான ஊடகச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் மூலம் நவீன ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் யதார்த்தங்களின் சவால்களை எதிர்கொள்ள முடியவில்லை. தற்போதுள்ள சட்டங்களில் குறிப்பிடத்தக்க ஒழுங்குபடுத்தல் இடைவெளிகளும் உள்ளன. காலம் கடந்த சட்டங்களை நீக்குதல், ஏனையவற்றைப் புதுப்பித்தல் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுடன் இணங்குகின்ற வகையில் ஒட்டுமொத்த ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை நியாயப்படுத்தும் நோக்குடன் ஊடகம் மற்றும் தொடர்பாடல் தொடர்பான அனைத்துச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்ய வேண்டிய அவசரத் தேவை காணப்படுகின்றது. இத்தகைய நெறிப்படுத்தல்கள் எதிர்காலத்தில் தேவைக்கேற்றவாறாக மாத்திரம் சட்டமியற்றும் நடவடிக்கைகளின் அவசியத்தைக் குறைக்க முடியும்.

L. **ஊடக உரிமையாண்மையில் வெளிப்படைத்தன்மை**: ஊடகத்தின் உரிமையானது, அது தனி உரிமையாளராக இருந்தாலும், பெருநிறுவனமாக இருந்தாலும், அரசாங்க அல்லது வேறு எந்த நிறுவனமாக இருந்தாலும் அதன் ஆசிரியர்பீட வழிகாட்டலுடன் பிரிக்கமுடியாத வகையில் இணைக்கப்பட்டுள்ளது. ஊடகங்கள் பொதுமக்களின் அபிப்பிராயத்தில் எந்தளவிற்குச் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதைக் கருத்தில் கொண்டு, ஊடகங்கள் யாருடையது மற்றும் அவர்களின் ஊடக நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் ஆசிரியப்பகுதி நிலைப்பாடுகளை அவர்கள் எந்தளவிற்குக் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும். ஊடக உரிமையாண்மையானது சில தனிநபர்கள் அல்லது நிறுவனங்களின் கைகளில் குவிந்திருக்கும்போது, அவற்றின் உரிமையைப் பொருட்படுத்தாமல் சேவையாற்றும்போது பொதுநலன்களை விட தனியார் நலன்கள் மேலோங்கி ஆதிக்கம் செலுத்தலாம். எனவே, ஜனநாயக ஊடக உரிமையாண்மையின் போக்குகளைக் கண்காணிக்க வேண்டியதுடன் ஒருசில உரிமையாளர்களின் கைகளில் அவை தேவையற்றுக் குவிவதற்கு எதிராக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். அந்தச் செயற்பாட்டின் முதற்படியாக, ஊடக உரிமையாண்மை தொடர்பான விபரங்கள் திறந்ததாகவும், வெளிப்படையானதாகவும், பொதுமக்களுக்கு (நிறுவனத்தின் கட்டுப்பாட்டாளருக்கு மட்டுமல்லாது) முன்கூட்டியே வெளிப்படுத்தப்படுவது கட்டாயமாக்கப்படல் வேண்டும். வெளிப்படைத்தன்மை என்பது ஊடக உரிமையாண்மையைக்

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Colombo 05.

கட்டுப்படுத்தாது எனினும், அதனை பொதுமக்களுக்குப் புலனாகக் கூடியதாக ஆக்குவதுடன், இதன் மூலம் வழங்கப்பட்ட உள்ளடக்கத்திற்கு எவ்வாறு பதிலளிப்பது என்பது தொடர்பான தகவலறிந்த தெரிவுகளை பொதுமக்கள் மேற்கொள்வதற்கு அது உதவுகின்றது. ஊடகத்தின் குறுக்கு உரிமை (அதாவது ஒரு நிறுவனம் அல்லது குழு ஒரே சந்தையில் அச்சு, வானொலி, தொலைக்காட்சி மற்றும் தொடரிணை ஊடகங்களை வைத்திருக்கும் போது), மற்றும் எந்த அடிப்படையில் வெளிநாட்டு தனிநபர்கள் அல்லது நிறுவனங்கள் இலங்கையில் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து உரிமையை கொண்டிருக்க முடியும் போன்ற விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய ஏனைய காரணிகளாகும்.

M. **ஊடகத் தொழில்முனைவோருக்கான சாதகமான சூழலை உருவாக்குதல்**: நவீன திறன்தொலைபேசிகளின் பெருக்கம் மற்றும் இணையப் பயன்பாடு அதிகரிப்பு ஆகியவை புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. ஊடகங்கள் புத்தாக்கத் தயாரிப்புக்களை உருவாக்குவதோடு மரபார்ந்த பெறுநர்களை ஈர்க்கும் புதிய வழிமுறைகளையும் பரீட்சிக்கின்றன. இந்த நிலைமைகள் ஒரு புதிய வகையான ஊடகத் தொழில்முனைவோர்களுக்கும் உள்நாட்டிலும் உலக அளவிலும் உள்ள முக்கிய சந்தைகளுக்கு விசேட அல்லது தனிப்பயனாக்கப்பட்ட உள்ளடக்கத்தை உருவாக்க உதவுகின்றன. உலகளாவிய வணிகச் செயன்முறை வெளியகச் சேவை (BPO) தொழில்துறையின் ஓர் விசேட துணைத்துறையான ஊடகச் செயன்முறை வெளியகச் சேவை (MPO), மேலதிகமாக வணிக வாய்ப்புகளைக் கொண்டுள்ளதுடன், இது வெளிநாட்டு ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்கு நிறுவனங்களுக்கு தொலைதூரத்திலிருந்து ஆக்கபூர்வமான சேவைகளை (நகருருக்கல், இசைத் தொகுப்பு மற்றும் மொழிபெயர்ப்பு உட்பட) வழங்குகின்றது. அரசாங்கம் ஊடக புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோரைத் தடுக்கின்ற பல்வேறு நிர்வாக, நிதி மற்றும் சட்டரீதியான தடைகளைக் குறைப்பதன் மூலமாக இத்தகைய சந்தை உந்துதல் செயன்முறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். அனைத்து ஊடக நிறுவனங்களும் நியாயமான முறையில் போட்டியிடுவதற்கான ஓர் சமமான நிலைப்பாட்டை அரசு உறுதி செய்தல் வேண்டும்.

N. **சுயாதீன ஊடகத்திற்கான நிதியளிப்பை விரிவுபடுத்துதல்**: வரலாற்று ரீதியாக ஊடகத்துறையானது விளம்பரம், அனுசரணைகள் மற்றும் சந்தாப்பணம் மூலமாக வருமானத்தை ஈட்டியுள்ளது. இந்த வருமான வழிவகைகள் தொடரிணை விளம்பரங்களின் அதிகரிப்பு மற்றும் சமூக ஊடக உள்ளடக்கத்திற்கு பார்வையாளர்களின் இடம்பெயர்வு போன்ற காரணங்களினால் சீர்குலைந்து குறைந்துவிட்டன. பல மரபார்ந்த ஊடக நிறுவனங்கள் சிறந்த ஊடகவியல் மற்றும் தரமான பொழுதுபோக்கிற்காக நிதியளிப்பதில் முன்னெப்போதுமில்லாத சிரமங்களை எதிர்கொள்கின்றன. ஊடகத் துறைக்கு வெளியிலிருந்து மேலதிக நிதியைப் பெறுவதும், ஊடகத்தின் ஆசிரியர்பீடச் சுதந்திரத்தை சமரசம் செய்யாத நியாயமான மற்றும் சமமான வழிகளில் பெற்றுக்கொள்வதும் சவாலாகும். அத்தகைய நிதியுதவிகள் உதாரணமாக அரசாங்க மானியங்கள், அல்லது அதிர்ஷ்ட இலாப சீட்டுக்கள் மற்றும் வீட்டு உடமையாளர்களிடம் அறிவிடப்படும் கட்டாய அனுமதிப்பத்திரக் கட்டணம் அல்லது நன்கொடை மூலங்களிலிருந்து கிடைக்கலாம். சில வகையான முக்கியமான ஆனால் வெளியக நிதியளிப்பை நியாயப்படுத்தும் சந்தைச் சக்திகளால் மாத்திரம் ஒத்துழைப்பு வழங்க முடியாத பொதுநல ஊடக உள்ளடக்கங்களும் காணப்படுகின்றன. ஊடகத் துறை மற்றும் ஊடக தொழில்வாண்மையாளர்கள் ஊடகத்தின் ஆசிரியர் பீடச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அதே நேரத்தில் வெளியக நிதியை (தொடரிணை நிதியளிப்பு போன்றவற்றை) திரட்டுவதற்கான புதிய மற்றும் புத்தாக்கமான வழிவகைகளை ஆராய்தல் வேண்டும்.

O. **ஊடகத்தின் மீதான பொதுமக்களின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துதல்**: ஊடகங்களின் பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்வின் பற்றாக்குறை ஊடக உள்ளடக்கம் மற்றும் ஊடக நிறுவனங்களின் மீதான பொது நம்பிக்கையைச் சிதைப்பதுடன், இது மறுபுறத்தில், ஊடகத்தின் ஜனநாயக செயற்பாடுகளை மேற்கொள்ளும் திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றது. பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவது என்பது படிப்படியான, கூட்டுப் பணியென்பதுடன், இதற்கு அறநெறி சார்ந்த ஊடகவியல், பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய ஊடக நிறுவனங்கள், பயிற்சியாளர்களிடையே கூடிய தொழில்முறை நிபுணத்துவம் மற்றும் ஊடக இணை

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

ஒழுங்குபடுத்தலுக்கான கட்டமைப்பு ஆகியவற்றின் ஒன்றிணைப்பு அவசியப்படுகின்றது.

P. **ஒரு பொதுச் சொத்தாக, மின்காந்த அலைக்கற்றைப் பயன்பாட்டை மேம்படுத்துதல்:** மின்காந்த அலைக்கற்றையில் உள்ள அலைவரிசைகள் அல்லது அதிர்வெண்கள் பொதுச் சொத்து என உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அலைக்கற்றை என்பது ஒரு வரையறுக்கப்பட்ட வளமென்பதுடன், அதன் பயன்பாடு தொலைத்தொடர்பாடல், ஒலிபரப்பு, அவசர தொடர்பாடல் மற்றும் பிற நோக்கங்களுக்காக பொதுமக்களின் சார்பாக ஒரு அரசாங்க நிர்வாகத்தால் உகந்த முறையில் நிர்வகிக்கப்படல் வேண்டும். டிஜிட்டல் ஒளிபரப்பு தரநிலைகளை ஏற்றுக்கொள்வது, அலைக்கற்றையினுள் சாத்தியமான வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் என்றாலும், அது முடிவற்ற அலைவரிசைகளை உருவாக்காது. எனவே, அலைக்கற்றையின் பாதுகாவலராக, இந்தப் பொது வளத்தைப் பயன்படுத்தும் ஒளிபரப்பாளர்கள் மீது சில சட்டப்பூர்வ கடப்பாடுகளை அரசாங்கம் விதிப்பதும் அலைக்கற்றை அணுகலின் நியாயமான வழங்கலை உறுதி செய்வதும் அவசியமானதாகும். எந்தவொரு அலைக்கற்றை ஒழுங்குபடுத்தல் பொறிமுறையும் மற்றைய எந்த நலன்களுக்கும் மேலாக பொதுமக்களின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

Q. **புலமைச்சொத்துக்கு மதிப்பளித்தல்:** புலமைச்சொத்து (IP) என்பது இலக்கியப் படைப்புகள், கலைத் தயாரிப்புகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தாக்கங்கள் மற்றும் வடிவமைப்புகளுக்கான திட்டங்கள் போன்ற தொட்டுணர முடியாத பொருட்களைக் குறிக்கும் ஒரு பொதுவான சொற்பதம் என்பதுடன், அவை முதன்மையாக அவற்றின் மதிப்பை ஆக்கப்பூர்வமான முயற்சிகளிலிருந்து பெறுகின்றன. ஊடகங்களில் உள்ள புலமைச்சொத்து தொடர்பான பிரச்சினைகள் சிக்கலானவை மற்றும் பெரும்பாலும் சர்ச்சைக்குரியவையாகும். தொடரிணையில் உள்ளடக்கத்தை உருவாக்கி பரப்புவதன் மூலமாக நிலைமை மேலும் சிக்கலாகின்றது. ஒட்டுமொத்தமாக, ஊடக தொழில்வாண்மையாளர்கள் மற்றும் அவர்களின் ஊடக நிறுவனங்களுக்கு தங்களின் உள்ளடக்கம் நாட்டின் புலமைச் சொத்துரிமை சட்டங்களால் பாதுகாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கும் உரிமை காணப்படுகின்றது. அதே நேரத்தில், ஏனைய உள்ளடக்கத்தை உருவாக்குபவர்கள் மரபார்ந்த ஊடக பணியாற்றுபவர்களாக இருந்தாலும், வலைப்பதிவர்கள் அல்லது சமூக ஊடகப் பயனர்களாக இருந்தாலும் அவர்கள் புலமைச் சொத்து உரிமைகளை மதிக்கும் ஊடகப் பண்பாட்டைக் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

R. **ஊடகப் பெறுநர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்:** ஊடக பெறுநர்கள் பிரஜைகளாகவும் நுகர்வோராகவும் சட்ட ரீதியான மற்றும் தார்மீக ரீதியான உரிமைகளைக் கொண்டுள்ளனர். நியாயமான, தகவலறிந்த மற்றும் பொறுப்புணர்வான ஊடகச் சூழலை உறுதி செய்வதற்கு ஊடகப் பெறுநர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. பெறுநர்களுக்கு துல்லியமான, சமநிலையான மற்றும் சூழல்சார் செய்திகளை கையாளுகை அல்லது புனைவு இல்லாமல் பெறுவதற்கான உரிமை காணப்படுகின்றது. அவர்கள் சமூகத்தில் பல்வகைமைத்தன்மையை பிரதிபலிக்கின்ற பன்மைத்துவ ஊடக உள்ளடக்கத்திற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். தொடரிணை தளங்களில் பயனர் உருவாக்கிய உள்ளடக்கத்தின் அதிகரிப்புடன், பொறுப்பான உள்ளடக்க மதிப்பீட்டை உறுதிப்படுத்துவது முக்கியமானதாக மாறியுள்ளது. இவ்வாறான மற்றும் ஏனைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு ஊடகப் பெறுநர்களின் உரிமைகள் மற்றும் நலனை முன்னிலைப்படுத்தி அறநெறியான தரங்களை வலியுறுத்தி விருத்திசெய்வதற்கு ஊடக நிறுவனங்கள், ஒழுங்குபடுத்தல் அமைப்புகள், தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு அவசியப்படுகின்றது.

S. **டிஜிட்டல் அறிவு உட்பட ஊடக மற்றும் தகவல் விளங்க அறிவை ஊக்குவித்தல்:** ஊடக மற்றும் தகவல் அறிவு (MIL) என்பது ஊடகங்கள் மற்றும் தகவல் அமைப்புகளுடன் வினைத்திறனாகவும் பொறுப்புணர்வுடனும் ஈடுபடுவதற்கான தகமைகள் மற்றும் திறன்களை பிரஜைகளுக்கு வழங்குவதாகும். இது மக்கள் மரபார்ந்த ஊடகத்தை அணுகும்போது அல்லது தொடரிணை சாதனங்களைப் பயன்படுத்தும்போது, தகவல் மற்றும் ஏனைய ஊடக உள்ளடக்கம் தொடர்பில் விமர்சனரீதியாகச் சிந்திப்பதற்கு வலுவூட்டுகின்றது. இது அவர்களை, சிவில் வாழ்க்கையிலும் ஜனநாயகத்திலும் பங்கேற்கக்கூடிய செயற்திறனை மற்றும் விமர்சிக்கக்கூடிய பிரஜைகளாக

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

மாற்றுகின்றது. இணையம் மற்றும் டிஜிட்டல் கருவிகளின் பயன்பாடு அதிகரித்து வருவதானது, தானாகவே MIL இல் உயர்வினை ஏற்படுத்தாது. இது அரசாங்கம், சிவில் சமூகம் மற்றும் கல்வியியலாளர்களின் தேவைகளைக் கண்டறிந்து வயதுக் குழுக்கள் மற்றும் சமூகத்தின் அனைத்து பிரிவுகள் ஊடாகவும் திறன்களைக் கட்டியெழுப்புவதற்கு அவசியப்படுகின்றது.

T. **ஊடகக் கல்வி மற்றும் பயிற்சியை மறுசீரமைத்தல்:** ஊடகத் துறையில் தொழிலவாண்மை நிபுணத்துவத்தன்மையை மேம்படுத்துவதற்கு அதன் பயிற்சியாளர்களுக்கு பிரதான எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பான சிறந்த புரிதல் அவசியமாகும். இந்த விடயத்தில், பல்கலைக்கழக அடிப்படையிலான ஊடகக் கல்வி அல்லது இதழியல் கற்கைகள் மற்றும் ஊடகத் துறையின் நடைமுறைத் தேவைகளுக்கு இடையே உள்ள இடைவெளி பாரிய தடையாக காணப்படுகின்றது. இந்த இடைவெளியைக் குறைப்பதற்கு, ஊடகவியல் மற்றும் வெகுசன ஊடகக் கல்விக் கற்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டியதுடன், இதனால் அவை தொழிற்துறைத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதுடன் மாறிவரும் ஊடகப் பாவனை முறைகளுக்கு இசைவாக்கமடைகின்றன. ஊடகத் தொழில்வாண்மையாளர்களின் பட்டய நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் தொழிற்துறை அனுபவமுள்ள ஊடகவியலாளர்களை தரநிலைப்படுத்துவதற்கும் நாடு முழுவதும் உள்ள ஊடகப் பயிற்சி நிலையங்களுக்கான தராதரங்களை அமைப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்.

U. **உலகளாவிய தொழில்நுட்ப தளங்களுடனான ஈடுபாடு:** அண்மைய ஆண்டுகளில், கிட்டத்தட்ட அனைத்து மரபுசார்ந்த ஊடக நிறுவனங்களும் தங்களது சொந்த வலைத்தளங்கள் மூலமாகவும், பெறுநர்களை ஈர்க்கும் வகையில் உலகளாவிய சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவும் தங்களின் செயற்பாடுகளை தொடரிணையில் விரிவுபடுத்தியுள்ளன. தனிப்பட்ட ஊடக நிறுவனங்கள் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு ஆதரவாக வடிவமைக்கப்பட்ட தேடுபொறிகள் அல்லது சமூக ஊடக தளங்களின் பயனர் நியதி மற்றும் நிபந்தனைகளில் செல்வாக்கு செலுத்த முடியாது. ஒரு தேசிய ஊடகக் கொள்கையானது உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களை கட்டுப்படுத்தும் நியாயாதிக்கத்தைக் கொண்டிருப்பதில்லை. அதே நேரத்தில், உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களை, உதாரணமாக அவர்களின் பிராந்தியத் தொழில் பங்காளர்கள் மூலமாக, தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தைக் கண்காணித்தல் மற்றும் தணித்தல் மற்றும் பணமாக்கப்படும் உள்ளடக்கத்திலிருந்து வருமானத்தைப் பகிர்ந்து கொள்வது போன்ற விடயங்களில் தொடர்ந்து உரையாடலில் ஈடுபடுத்துவது அவசியமானது. அனர்த்தங்கள் போன்ற அவசர காலங்களிலும், தேர்தல் காலங்களிலும் உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்களுடனான இத்தகைய தொடர்ச்சியான ஈடுபாடு இன்றியமையாததாக காணப்படும்.

V. **AI மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களிலிருந்தான நன்மைகளைப் பயன்படுத்துதல்:** வெகுசன ஊடகங்கள் பல்வேறு வழிகளில் செயற்கை நுண்ணறிவால் (AI) குறிப்பிடத்தக்க அளவில் தாக்கம் பெற்றுள்ளதுடன் இது தொழிற்துறையின் தற்போதைய மற்றும் எதிர்காலத்தை மாற்றியமைக்கின்றது. AI தொழில்நுட்பம் உள்ளடக்க உருவாக்கம், ஒழுங்குபடுத்தல் மற்றும் விநியோகம் ஆகியவற்றில் கூடிய அளவில் பயன்படுத்தப்படுகின்றது. தன்னியக்க வழிமுறைகள் தொடரிணையில் உள்ளடக்கப் பரிந்துரைகளைத் தனிப்பயனாக்கம் செய்வதற்கு உதவுவதுடன் பயனர் அனுபவத்தையும் ஈடுபாட்டையும் மேம்படுத்துகின்றன. செய்தி நிறுவனங்கள் தரவுப் பகுப்பாய்விற்காக AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதுடன், இது வேகமான மற்றும் வினைத்திறனான ஊடகவியலை சாத்தியப்படுத்துகின்றது. இலக்கு வைக்கப்பட்ட விளம்பரம் மூலமாக ஊடக பணமாக்கலிலும் AI பங்கு வகிக்கின்றது. எவ்வாறாயினும், குறிப்பான செயன்முறை சார்புகளுக்கான சாத்தியம், AI- உருவாக்கிய உள்ளடக்கம் மூலமாக தவறான தகவல் மற்றும் வெறுப்பு பேச்சின் பரவல் மற்றும் மரபார்ந்த ஊடகவியல் மீதான தாக்கம் குறித்துக் கரிசனைகள் எழுகின்றன. AI தொழில்நுட்பம் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், வெகுசன ஊடகங்களில் அதன் செல்வாக்கு அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளதுடன், பொறுப்பான மற்றும் பக்கச்சார்பற்ற ஊடக நடைமுறைகளை உறுதி செய்வதற்கான நெறிமுறையான பரிசீலனைகள் மற்றும் ஒழுங்குமுறைக் கட்டமைப்புகளுக்கு உத்தரவாதம்

அளிக்கவேண்டிய கடப்பாடு உள்ளது.

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

7. பொருத்தப்பாடு மற்றும் பரப்பெல்லை

தேசிய ஊடகக் கொள்கைக்கான வாய்ப்பு, அதாவது அது எந்தளவிற்குப் பிரயோகமாகும் என்பது பின்வருமாறு வரையறுக்கப்படுகின்றது:

- *கருத்தியல் அடிப்படையில்,* ஊடகக் கொள்கையானது செய்தி ஊடகங்கள், கல்வி ஊடகங்கள், பொழுதுபோக்கு ஊடகங்கள் அத்துடன் சமூக ஊடகங்களில் தனிநபர் தொடர்பாடல்கள் உள்ளிட்ட ஏனைய தொடர்பாடல் செயற்பாடுகளைக் கையாள்வதுடன், இவை ஒருங்கிணைந்த சாதனங்கள் மூலம் நுகரப்படுகின்ற தற்போதைய ஊடக சூழலைப் பிரதிபலிப்பதன் காரணத்தினால் ஒரு கூட்டான கருத்தில் பரிசீலிக்கப்படல் வேண்டும்.
- *ஒட்டுமொத்த துறையின் அடிப்படையில்,* ஊடகக் கொள்கையானது ஊடகத் துறையின் (ஊடக உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள்); ஊடக தொழில்வாண்மையாளர்கள் (ஊடகவியலாளர்கள் மற்றும் அனைத்து ஊடக பணியாளர்கள்); ஊடகப் பெறுநர்கள்; ஊடக கல்வியாளர்கள் மற்றும் பணியாற்றுபவர்கள்; அத்துடன் ஊடக கட்டுப்பாட்டாளர்கள் ஆகிய அனைவரதும் நலன்களை உள்ளடக்கியதாகும்.
- *ஊடகப் பரம்பல் விதங்களின் அடிப்படையில்,* ஊடகக் கொள்கையானது அச்சு ஊடகத்தை (செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகள்); ஒலிபரப்பு ஊடகம் (வானொலி மற்றும் தொலைக்காட்சி); மற்றும் தொடரிணை ஊடகம் (செய்தி இணையதளங்கள், அபிப்பிராயங்களுக்கான இணையதளங்கள், அத்துடன் சமூக ஊடக தளங்கள்) ஆகியவற்றை உள்ளடக்கியது.
- *ஊடக உள்ளடக்கப் பல்வகைமைத்தன்மையின் அடிப்படையில்,* ஊடகக் கொள்கையானது செய்தி அறிக்கையிடல், நடப்பு விவகாரங்களின் பகுப்பாய்வு, அம்சங்கள், அபிப்பிராயங்கள், புலனாய்வு ஊடகவியல், விளையாட்டு உள்ளடக்கம், புகைப்பட ஊடகவியல், ஆவணப்படம் தயாரிப்பு மற்றும் பொழுதுபோக்கு விடயங்களை உள்ளடக்கியது. இது மேலும் அச்சு, ஒலிபரப்பு அல்லது தொடரிணை ஊடகம் மூலமாக அவர்களின் தயாரிப்புகள் பரப்பப்படுகின்ற விளம்பரம் மற்றும் மக்கள் தொடர்புகளையும் உள்ளடக்குகின்றது.
- *பணியாற்றுபவர்களைப் பொறுத்தவரை,* ஊடகக் கொள்கையானது எழுத்து, ஒலி, காணொளி அல்லது பல்லூடக வடிவங்களைப் பயன்படுத்தி செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்களை அறிக்கையிடும் அபிப்பிராய எழுத்தாளர்கள் மற்றும் கட்டுரை பத்தி எழுத்தாளர்கள்; ஊடக முகாமையாளர்கள்; மற்றும் தொடரிணையில் செய்தி, கல்வி, விளையாட்டு அல்லது பொழுதுபோக்கு உள்ளடக்கம் தொடர்பான உள்ளடக்கத்தை உருவாக்குபவர்கள்/பொறுப்பாளர்கள்/ ஆசிரியர்கள் போன்ற ஊடகவியலாளர்களை உள்ளடக்கியதாகும்.
- *உள்ளடக்கத்தின் தோற்றத்தின் அடிப்படையில்,* ஊடகக் கொள்கையானது இலங்கையை தளமாகக் கொண்ட (அல்லது முதன்மையாக இலங்கைப் பெறுநர்களை இலக்காகக் கொண்டது) ஊடக நிறுவனங்கள் மற்றும் உள்ளடக்க படைப்பாளர்களால் தயாரிக்கப்பட்ட ஊடக உள்ளடக்கம் தொடர்பானது. எவ்வாறாயினும், இது இலங்கையில் உள்ள ஊடகப் பெறுநர்கள் தங்களின் நாட்டுக்கு வெளியே தயாரிக்கப்படும் உள்ளடக்கத்தை, உதாரணமாக, செயற்கைக்கோள் தொலைக்காட்சி ஒலிபரப்பு, வெளிநாட்டு சஞ்சிகைகள் மற்றும் தொடரிணை மூலமாக தொடர்ந்து அணுகுவதை அங்கீகரிக்கின்றது.

  சினிமாத்துறை மற்றும் இசை, நாடகம், பொம்மலாட்டம் மற்றும் நகைச்சுவை போன்ற கலை நிகழ்ச்சிகளைப் பொறுத்த வரையில், அவற்றின் உள்ளடக்கம் ஒலிபரப்பு அல்லது தொடரிணை நிலையங்கள் மூலம் ஒளிபரப்பப்படும்போது மட்டுமே ஊடகக் கொள்கை பொருந்தும்.

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

## 8. கொள்கை அமுலாக்கம்

### 8.1 அமுலாக்கல் மூலோபாயங்கள்

தேசிய ஊடகக் கொள்கையானது 2024 முதல் 2033 வரையிலான 10 ஆண்டு காலப்பகுதியை உள்ளடக்கியதாகக் கருதப்படுகின்றது. இது பொருத்தமான இற்றைப்படுத்தல்களுக்காக ஒவ்வொரு மூன்று (3) வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

தேசிய ஊடகக் கொள்கையை அமல்படுத்துவதற்கு ஒரு முறையான மற்றும் பல பங்குதாரர் அணுகுமுறை தேவைப்படுகின்றது. தேசிய ஊடகக் கொள்கை முறையாக அங்கீகரிக்கப்பட்டவுடன் செயற்படுத்தல் மூலோபாயங்கள்கள் விரைவில் தயாரிக்கப்படும்.

### 8.2 பொறுப்பு மற்றும் அதிகாரம்

அரசாங்க நிறுவனங்கள், ஊடகத் துறை, ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், ஊடகக் கல்வியாளர்கள், ஊடக ஆய்வாளர்கள், சிவில் சமூக அமைப்புகள், உலகளாவிய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய அனைத்துப் பங்குதாரர்களின் பங்கேற்புடன் செயற்படுத்தல் செயன்முறையை ஒருங்கிணைக்கும் பொறுப்பை வெகுசன ஊடக அமைச்சு ஏற்கும்.

## 6. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

தேசிய ஊடகக் கொள்கையின் அமுலாக்கத்திற்கு போதுமான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு அவசியமாவதுடன், அதற்கான ஒரு திட்டம் வெகுசன ஊடக அமைச்சினால் உருவாக்கப்படும்.

## 7. முடிவுரை

தேசிய ஊடகக் கொள்கையின் அமுலாக்கத்திற்காக உத்தேசிக்கப்பட்ட தசாப்த காலத்தில் இலங்கையின் ஊடக மற்றும் தொடர்பாடல் பரப்புகள் விரைவான மாற்றங்களை தொடர்ந்தும் எதிர்கொள்ளவுள்ளது. தொழில்நுட்பம், குடித்தொகையியல் மாற்றங்கள் மற்றும் சந்தை சக்திகள் ஆகியவை மாற்றத்தின் பிரதான காரணிகளாக இருக்கும் அதேவேளையில், இந்தத் துறை உலகளாவிய பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகள் போன்ற கணிக்க முடியாத நிகழ்வுகளாலும் பாதிக்கப்படலாம்.

அனைத்து ஊடக நிறுவனங்களும் அவற்றின் உள்ளடக்க வகை மற்றும் பரம்பல் முறைமைகளைப் பொருட்படுத்தாமல் வலுவாகவும், மீண்டெழும் தன்மையுடையதாகவும் இருப்பதற்கு தங்களது பெறுநர்களைச் சிறப்பாக ஈடுபடுத்த வேண்டியதுடன், அவர்களின் நம்பிக்கையை மீண்டும் பெற்றுக்காள்வதற்கு புத்தாக்கங்களை உருவாக்குதல் வேண்டும்.

தேசிய ஊடகக் கொள்கையாலும் அதன் அமுலாக்க மூலோபாயங்கள் மூலம் ஊடகத்துறையின் பங்குதாரர்களுக்கு சவாலான காலங்களில் முன்னோக்கிச் செல்வதற்கான தொலைநோக்குப் பார்வையையும் வழிகாட்டுதலையும் வழங்க முடியும் என உத்தேசிக்கலாம்.

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

பின்னிணைப்பு

இலங்கையில் ஊடக அறநெறிகள்

ஊடக அறநெறிகள் என்பது ஊடகத் துறையில் பணிபுரியும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நடத்தைக்கு வழிகாட்டுகின்ற கொள்கைகள், விழுமியங்கள் மற்றும் தரநிலைகளைக் குறிக்கின்றது. இந்த நெறிமுறை வழிகாட்டுதல்கள், செய்திகள் மற்றும் தகவல்களைச் சேகரித்தல், அறிக்கையிடுதல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றில் பொறுப்புணர்வான மற்றும் நியாயமான நடத்தையை உறுதிப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. ஊடக நெறிமுறைகள் துல்லியம், நேர்மை, பாரபட்சமற்ற தன்மை, பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் பல்வேறு கண்ணோட்டங்களுக்கான உணர்திறன் உள்ளிட்ட பரந்த அளவிலான பரிசீலனைகளை உள்ளடக்குகின்றது. பொதுமக்களின் பார்வையில் ஊடக நிறுவனங்களின் நம்பகத்தன்மையையும் நம்பிக்கைத்தன்மையையும் பேணுவதற்கு ஊடக அறநெறிகளைப் பின்பற்றுவது அவசியமாகும்.

பொறுப்புக்கூறலுள்ள ஊடகவியல் முன்முயற்சியால் பேணப்படும் சர்வதேச தரவுத்தளத்தில் 400 க்கும் மேற்பட்ட ஊடக அறநெறிகள் உள்ளன. இவை தனிப்பட்ட ஊடகமாக; ஒரு நாட்டின் ஊடகத் தொழிற்துறையின் பிரிவாக; ஊடக தொழிற்சங்கம் அல்லது ஊடகவியலாளர்கள் சங்கமாக; அல்லது சட்டப்பூர்வ பத்திரிகை பேரவை மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இணையத்தளம்: https://accountablejournalism.org/ethics-codes

இலங்கை மரபார்ந்த ஊடகங்கள் அனைத்தும் ஊடக அறநெறிகளைக் கொண்டிருக்கவில்லை. அச்சு ஊடகத் துறைக்கு மாத்திரம் பின்வருமாறு இரண்டு அறநெறிமுறைகள் உள்ளன:

- 1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்தின் பிரிவு 30 (i) (a) இன் கீழ் வெளியிடப்பட்ட **(அச்சு) ஊடகவியலாளர்களுக்கான அறநெறிகள்**, பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு 14 அக்டோபர் 1981 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இதுவே பத்திரிகைகளுக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து தீர்மானமெடுப்பதற்கு இலங்கைப் பத்திரிகை பேரவை பயன்படுத்தும் கட்டமைப்பாகும். https://slpc.lk/media/attachments/2019/10/18/1981-10-14-english.pdf
- 2004 இல் இலங்கையின் பத்திரிகை முறைப்பாடுகள் ஆணைக்குழுவால் (PCCSL) ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை பத்திரிகை ஆசிரியர்களின் சங்கத்தின் **தொழில்வாண்மை நடைமுறைக் கோவை (நெறிமுறைக் கோவை)** (அதிலிருந்து பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டது). இது தீர்ப்புகளில் பிணிப்புத்தன்மை அற்ற PCCSL எனும் ஓர் தன்னார்வ அமைப்பால் பெறப்படுகின்ற பத்திரிகைகளுக்கு எதிரான முறைப்பாடுகளைக் கேட்பதற்கான கட்டமைப்பாக பயன்படுத்தப்படுகிறது. http://www.pccsl.lk/code-of-professional-practice-code-of-ethics-of-the-editors-guild-of- Sri-lanka-adopted-by-the-press-complaints-commission- Sri-Lanka/

இலங்கையின் வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்புத் துறையில் தொழிற்துறை ரீதியிலான அறநெறிகள் இல்லை. வரலாற்று ரீதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (SLBC) மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் (SLRC) ஆகியவை நிகழ்ச்சித் தயாரிப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளம்பரங்களுக்கு வழிகாட்டுவதற்காக தங்களுடைய சொந்த, உள்ளக கோவைகளை உருவாக்கியுள்ளன, ஆனால் இவை பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை. தனியாருக்குச் சொந்தமான ஒலிபரப்பாளர்கள் சிலர் தங்களிடம் உள்ளகக் கோவைகள் இருப்பதாக கூறினாலும், அறநெறிக் கோவை எதையும் வெளியிடவில்லை.

தொழில்முறையான இணைய ஊடகவியலாளர்கள் சங்கம் (PWJA) 2018 இல் தொடரிணை தொழில்முறை ஊடகவியலாளர்களுக்கான நெறிமுறை கோவையை ஏற்றுக்கொண்டது. இது செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்களை உள்ளடக்கும் இலங்கை இணையத்தளங்களுக்கு உரியதென்பதுடன், ஒரு சில செய்தி இணையதளங்கள் மட்டுமே இதைத் தமது கட்டமைப்பாக ஏற்றுக்கொண்டுள்ளன.

http://www.meepura.com/wp-content/uploads/2018/01/Web-Media.pdf

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

பின்னிணைப்பு

பிரதான சொற்களஞ்சியம்

மரபார்ந்த ஊடகம்

மரபார்ந்த ஊடகம் என்பது இணையத்திற்கு முன்னராக இருந்த ஊடகங்களின் மரபார்ந்த வடிவங்களான பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றைக் குறிக்கின்றது. அவை "மரபார்ந்த" என்று கருதப்படுவது ஏனெனில் அவை நீண்ட காலமாக உள்ளதுடன் பல தசாப்தங்களாக செய்தி, தகவல் மற்றும் பொழுதுபோக்குக்கான முதன்மை ஆதாரங்களாக உள்ளமையாலாகும். இப்போது, பெரும்பாலான நிகழ்நிலை ஊடகங்கள் தொடரிணைக்கு விரிவாக்கப்பட்டுள்ளன.

ஊடக பல்வகைமைத்தன்மை

ஊடகங்களில் உள்ள பல்வகைமைத்தன்மை என்பது அந்த மக்களின் பிரச்சினைகள் மற்றும் அபிப்பிராயங்கள் குறித்த பல்வேறு பண்பாட்டு, சமூக மற்றும் அரசியல் கண்ணோட்டங்களை ஊடகங்கள் தனது ஆசிரியர்பீட உள்ளடக்கங்களில் எந்தளவிற்குத் துல்லியமாக பிரதிபலிக்கின்றது என்பதைக் குறிக்கின்றது. சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உண்மைப் பிரதிநிதித்துவம் மற்றும் சமமான நடத்துகை ஆகியன செய்திகள் மற்றும் நடப்பு விவகாரங்களில் குறிப்பாக முக்கியமானதென்பதுடன், இதனால் ஒரே மாதிரியான உள எண்ணங்கள், தவறான புரிதல்கள் மற்றும் முரண்பாடுகளைத் தவிர்க்கவும், மனித பல்வகைமைத்தன்மையை நியாயமான முறையில் சித்திரிக்கவும் முடியும். ஊடகத்தில் உள்ள பல்வகைமைத்தன்மை என்பது அறிக்கையிடல், ஆவணப்படங்கள், உரையாடல் நிகழ்ச்சிகள், வாக்ஸ்-பாப்ஸ் போன்ற ஊடகங்களில் உள்ள நிகழ்ச்சிகள் மற்றும் வகைகளின் வரிசையையும் குறிக்கிறது, ஏனெனில் அவை முடிவிலியான விடயங்களில் ஜனநாயக பங்கேற்பிற்கான பல்வகை தளங்களைத் திறக்கின்றன. [*ஆதாரம்: கருத்து சுதந்திரம் மற்றும் ஊடக விருத்தியில் உலக போக்குகள்: உலகளாவிய அறிக்கை 2021-22*]

ஊடகப் பன்மைத்துவம்

ஊடகப் பன்மைத்துவம் என்பது தெரிவு மற்றும் பல்வகைமைத்தன்மை மற்றும் ஊடகம் தொடர்பான நிறுவனங்களின் செறிவாக்கல், மையப்படுத்தல் மற்றும் ஏகபோகமயமாதல் போன்றவற்றுடன் தொடர்புடையதாகும். ஊடகப் பன்மைத்துவத்தை உற்பத்தி அல்லது வழங்கலின் ஒரு அம்சமாகவும், செய்தி நுகர்வோரின் கண்ணோட்டத்திலிருந்தும் பார்க்க முடியும். செய்திகளின் உள்ளடக்கம் பன்மைத்துவத்தைப் புரிந்துகொள்வதுடன் தொடர்புடையதாகும். உண்மையான பன்மைத்துவத்திற்கு செய்தி ஆதாரங்கள் அணுகக்கூடியதாகவும், பெண்கள், இளைஞர்கள், கிராமப்புறச் சமூகங்கள் மற்றும் மொழியியல் மற்றும் கலாச்சார சிறுபான்மையினர் உட்பட பலதரப்பட்ட பார்வையாளர்களின் தேவைகள் மற்றும் நலன்களைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவும் இருக்க வேண்டும். பன்மைத்துவம் என்பது மேலும் அதிகரித்தளவில் வடிவமைக்கப்பட்டுள்ள குறிப்பான செயன்முறைகளால் பயனர் உருவாக்கிய உள்ளடக்கம் மற்றும் தகவல்தொடர்பாடல் சூழலில் ஊடக நுகர்வு ஆகியவற்றை உள்ளடக்கும். பன்மைத்துவம் என்பது பல்வேறு குரல்கள் பொது உரையாடல் மற்றும் கலந்துரையாடலை தெரிவிக்க முடியுமாகவுள்ள ஓர் துடிப்பான பொது தளத்தின் இருப்பைக் குறிக்கிறது. [*ஆதாரம்: கருத்து சுதந்திரம் மற்றும் ஊடக விருத்தியில் உலக போக்குகள்: உலகளாவிய அறிக்கை 2021-22*]

ஊடகத் தொழில்வாண்மையாளர்கள்

"ஊடக தொழில்வாண்மையாளர்கள்", எழுத்தாளர்கள், உள்ளடக்க உருவாக்குநர்கள், உள்ளடக்க ஆசிரியர்கள், அறிவிப்பாளர்கள் மற்றும் வழங்குநர்கள், ஒலிபரப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள், உரிமையாளர்கள், முகாமையாளர்கள், ஊடகக் கல்வியாளர்கள் மற்றும் ஆய்வாளர்கள், ஊடகத் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோரை உள்ளடக்குகின்றது.
[*ஆதாரம்: ஊடக வல்லுநர்களின் பட்டய நிறுவனம் அமைப்பதற்கான வரைவு சட்டமூலம், செப்ரெம்பர் 2021 இன் நிபுணர் குழுவின் இறுதி அறிக்கையில், இந்த வரைவிலக்கணம் பயன்படுத்துகிறது*]

Ministry of Mass Media
No. 163, Kirulapone Mawatha,
Polhengoda, Colombo 05.

**பல் பங்குதாரர்களின் அணுகுமுறை**

பல் பங்குதாரர் அணுகுமுறை என்பது அரசாங்கம், தனியார் துறை நிறுவனங்கள், உள்ளூராட்சிச் சபைகள், அரச சார்பற்ற மற்றும் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகிய பங்குதாரர்கள் சில பிரச்சினைகளுக்கு கூட்டுத் தீர்வைக் காண்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுவதாகும். [ஆதாரம்: https://www.sciencedirect.com/topics/social-sciences/multi-stakeholders]

**பொதுநலன்**

பொதுநலன் என்பது நம் அனைவரின் வாழ்க்கை மற்றும் நல்வாழ்வுக்கும், சமூகத்திற்கும் நமது சமுதாயங்களுக்கும் பொருத்தமான எதனையும் குறிக்கிறது. இது "பொது நன்மை" பற்றியதுடன், அதாவது நமது ஆரோக்கியம், வாழ்வாதாரம், வாழ்க்கைத் தரம், பாதுகாப்பு மற்றும் நமது ஆளுகையைப் பாதிக்கும் விடயங்களை பற்றியதாகும். செய்தி ஊடகவியல் என்பது சமூகத் தொடர்புடைய விடயங்களை அறிக்கையிடுகின்றது. ஒரு செய்தியை அறிக்கையிடுவதற்கு சுருக்கமான செய்தி அறிக்கையை கொண்ட ஊடகவியலாளர், ஒரு விடயத்தை உள்ளடக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பாக, பொது நலனை ஆராய்தல் வேண்டும். [ஆதாரம்: https://mediahelpingmedia.org/basics/applying-the-public-interest-test-to- journalism/]